**<u>தனி ஆள் மூலம் / மிக அவசரம்</u>**

தலைமைச் செயலகம்
சென்னை– 600 009.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
<u>கடித எண்.59325 / ட்டி3 / 2006 நாள்.16. 08. 2007</u>

அனுப்புநர்

திரு. வீ. கு. சுப்புராஜ், இ. ஆ. ப.,
அரசுச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,
சென்னை – 600 006.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பு – ஆண்டு வருவாய் ரூ.50,000/–க்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வசதியுள்ள தனியார் மருத்துவமனைகளில் இதய அறுவை சிகிச்சை செய்வதற்கு தமிழ்நாடு நோயாளர் நிதியுதவி அமைப்பின் மூலம் நிதியுதவி அளித்திட வல்லுனர் குழு அமைத்தல் – கருத்துரு கேட்டல்.

பார்வை: 1) அரசு கடித எண்.59325 / ட்டி3/2006–1, நாள்.5. 1. 2007.
2) தங்கள் கடித எண். 01240/பி&டிIII/ த.மா.நோ.நி.உ. அ / 2007 நாள். 11. 4. 2007 மற்றும் 11.7. 2007.

******

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. 30.7.2007 மற்றும் 31.7.2007 ஆகிய இரண்டு தேதிகளில் தலைமைச் செயலகத்தில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைகளை உடனடியாகப் பெற இயலாத நிலை இருப்பதானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது. இக்குறையைக் களையும் நோக்கத்தோடு, தனியார் மருத்துவமனைகளோடு இணைந்து, இத்தகைய அறுவை சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்றும், அத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் இதய அறுவை சிகிச்சைக்காகப் பதிவு செய்து காத்திருப்போரில் ஆண்டுதோறும் ரூ.50,000/–க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்தவற்காக, தமிழ்நாடு நோயாளர் நிதி உதவி அமைப்பின் மூலமாக மூடிய இதய அறுவை சிகிச்சைக்கு ரூ.10,000/–ம்,

சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு ரூ.30,000/—ம் மற்றும் கடினமான திறந்த அறுவை சிகிச்சைக்கு ரூ.70,000/—ம் நிதி உதவி வழங்குவது என்றும், இத்திட்டத்தில் பங்கு பெற வசதியுள்ள தனியார் மருத்துவமனைகள் முன்வரலாம் என்றும் இம்மருத்துவமனைகளை அரசின் வல்லுநர் குழு ஆய்ந்து, தகுதியுள்ள மருத்துவமனைகளைத் தெரிவு செய்யும் என்றும் இம்மாநாட்டு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

3. மேலே பத்தி 2இல் முடிவு செய்யப்பட்டுள்ள திட்டத்தில் பங்கேற்று, அறிவிக்கப்பட்டுள்ள நிதி உதவி கொண்டு குழந்தைகள் இதய அறுவைச் சிகிச்சை செய்திட விருப்பம் தெரிவிக்கும் தனியார் மருத்துவமனைகளை ஆராய்ந்து அதில் தகுதியுள்ள மருத்துவமனைகளைத் தெரிவு செய்ய "அரசினர் வல்லுநர் குழு" அமைத்திட, அக்குழுவில் இடம் பெறும் வல்லுநர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர் பட்டியல் மற்றும் அவர்களது பணிகள் முதலானவை குறித்த விரிவான கருத்துருவினை உடனே அரசுக்கு அனுப்புமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசுச் செயலாளருக்காக